Registered as a NewsPaper

# ஈழநாதம்

Eelanatham — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - iv

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஆனி - 19 4-07-2003 வெள்ளிக்கிழமை ஓசை 136

நலிவுற்றோர் நலன் வாழ்வுத் திட்டம்
நலிவுற்றோருக்கு உதவுவோம்
கொடிவாரம்
01.07.2003 - 21.07.2003
சமுதாய முன்னேற்ற நிலையம்,
தலைமைச் செயலகம்,

- சமாதான வழிமூலம் தீர்வு -

# விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்து கனேடியத் தூதுவர் பாராட்டு!

## தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பில் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் விடுதலைப்புலிகள் காட்டும் உறுதிப்பாடு குறித்து சிறிலங்காவிற்கான கனேடியத் தூதுவர் தமது பாராட்டைத் தெரிவித்துள்ளார். நேற்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடனான சந்திப்பின் போதே இப்பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.**

நேற்று நண்பகல் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

சமாதானப் பேச்சுவார்த்தையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள தேக்க நிலை குறித்தும், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்குறித்தும் அரசியல்துறைப் பொறுப்பாளருக்கும், கனேடியத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டது.

இதில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்திய அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபை அரசாங்கம் முன்வைத்தால் அதனைப் புலிகள் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

அத்தோடு, விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத் தீர்வுகாண்பதில் கொண்டுள்ள உறுதிப்பாட்டை அரசியல்துறைப் பொறுப்பாளர்

(iv ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய பேச்சுக்களில் கலந்துகொண்ட கனேடியத் தூதுப் பிரதிநிதிகள்

### யாழ் நகரின் மையத்திலுள்ள

## 512 பிரிகேட் தலைமையகத்தினுள் பாரிய கட்டுமானப் பணிகள்

யாழ் நகரின் மத்தியில் அமைந்துள்ள 512வது பிரிகேட் தளத்தினுள் பாரிய கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

கடந்த சில வாரங்களாக இந்தப்படை படைமுகாமினுள் தண்டவாளங்கள், சீமெந்துப் பைகள் என்பன துருப்புக்காவி மூலம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அத்துடன் இந்தப் படைத்தளத்தினுள் பரபரப்பான இராணுவ நடமாட்டமும் நிலவுகிறது. இதனால் இந்த முகாமினுள் பாரிய பதுங்கு குழிகள் அமைக்கப்படலாம் என்றும் நம்பப்படுகின்றது.

(iv ஆம் பக்கம் பார்க்க)

## வைரஸ் காய்ச்சல் பரவுகிறது!

(கொழும்பு)

நாடு முழுவதும் ஒருவகை வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாக சுகாதார அமைச்சு கூறுகின்றது. இந்த நோய் தொற்று நோயாக இல்லாத போதிலும் வேகமாகப் பரவி வருவதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

மழையுடன் கூடிய காலநிலை இருப்பதன் காரணமாக இந்தக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக சிறிலங்காவின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

### யாழ்.இல் புலிகளிடமுள்ள

## தொலைத்தொடர்பு சாதனங்களின் விபரம் கண்காணிப்புக்குழு கோரல்

யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளிடமுள்ள தொலைத்தொடர்பு சாதனங்களின் விபரத்தை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

சிறிலங்கா இராணுவத்தினர் அண்மைக் காலத்தில் யாழ்.குடாநாட்டிலுள்ள விடுதலைப்புலிகளின் அலுவலகங்களில் சக்தி வாய்ந்த தொலைத்தொடர்பு சாதனங்கள் இருப்பதாகக் கூறி தேடுதல் நடத்த முற்பட்டமை தெரிந்ததே.

# கரும்புலிகள் நாளை எழுச்சியுடன் அனுஷ்டிக்க அனைத்து இடங்களிலும் துரித ஏற்பாடு

கரும்புலிகள் நாளை எழுச்சியுடன் அனுஷ்டிக்க அனைத்து இடங்களிலும் துரிதமாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். வடமராட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் 1987 ஆம் ஆண்டு ஜூலை 05 ஆம் திகதி முதற்கரும்புலி மில்லரினால் கரும்புலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட பகுதியில் கரும்புலிகள் ஞாபகார்த்த மண்டபம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இது 1996ஆம் ஆண்டு படையினர் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றிய வேளை, உடைக்கப்பட்டது. தற்போது அங்கு மீள புனரமைக்கப்பட்டுள்ளது. நாளை கரும்புலி கப்டன் மில்லரின் சிலைப் பகுதியில் கரும்புலிகள் அஞ்சலி நிகழ்வு காலை நடைபெறவுள்ளது. மாலை நெல்லியடி நகரப் பகுதியில் இருந்து கரும்புலிகளின் உருவப் படங்கள்

(iv ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளுக்கெதிரான பிரசுரம் விநியோகித்த -

## ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் வட்டுக்கோட்டையில் விரட்டப்பட்டனர்

யாழ். வட்டுக்கோட்டைப் பகுதி இளைஞர்களுக்கும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலருக்குமிடையில் முறுகல் நிலை உருவாகி அப்பகுதியில் நேற்று பதட்ட நிலை காணப்பட்டது. வட்டுக்கோட்டைப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கெதிரான துண்டுப்பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கும் அப்பகுதி இளைஞர்களுக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இதன்போது அப்பகுதிக்கு பிக்கப் வாகனத்தில் வந்த மேலும் பல ஈ.பி.டி.பி. யினர் வாக்குவாதத்தில் ஈடுபட நிலைமை மோசமடைந்து மோதல் உருவாகும் அளவுக்கு சென்றபோது அப்பகுதி பொது மக்கள் திரண்டு வந்து ஈ.பி.டி.பி. யினரை மிரட்டி அப்பகுதியிலிருந்து விரட்டினர்.

### இணைப்பு

கரும்புலிகள் நாள் உருவப்படம் இன்றைய ஈழநாதம் நாளிதழுடன் இணைக் கப்பட்டுள்ளது.

## அநுராதபுர சாலியபுரம் படைமுகாம் ஆயுதக்களஞ்சியத்தில் வெடிவிபத்து

### களஞ்சியம் முற்றாக எரிந்தது

(கொழும்பு)

அநுராதபுரம் சாலியபுரம் சிறிலங்கா படைமுகாம் ஆயுதக் களஞ்சியத்தில் பாரிய வெடிவிபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம் சாலியபுரம் கஜபாகு படைப்பிரிவில் ஆட்லறி எறிகணைகள் வைக்கப்பட்டிருந்த பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இவ்விபத்தில் ஆயுதக் களஞ்சியம் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதெனத் தெரிவித்த படைத்தரப்பு இதனால் ஏற்பட்ட உயிரிழப்புத் தொடர்பாக இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## மட்டு. ஈ.பி.டி.பி. முகாம் மீது கைக்குண்டுத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள ஈபிடிபி அலுவலகம் மீது நேற்றுக் காலை இனந் தெரியாதோரால் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பண்டிஸ்லேனில் அமைந்துள்ள மேற்படி அலுவலகத்தின் முன் வாசல் பக்கமாக இந்தக் கைக்குண்டு வீழ்ந்து வெடித்துள்ள போதிலும் எவருக்கும்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட புனர்வாழ்விற்கான பணி; 14 வேலைத் திட்டங்களில் பாரிய நிதி மோசடி!

### 2000-2002 ஆண்டு காலப் பகுதியில் நிகழ்ந்துள்ளதாக யாழ். அரச அதிபர் அமைச்சிற்குக் கடிதம்

யாழ். மாவட்டத்தில் 2000-2002 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட அரசின் புனர்வாழ்வு வேலைகளில் மிகப் பெரியளவிலான ஊழல் மோசடிகள் நிகழ்ந்துள்ளதாக உள்ளக கணக்காய்வாளர்களின் அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு புனர்வாழ்வு, புனரமைப்பில் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இம்மோசடி தொடர்பான கடிதத்தில் அக்காலப் பகுதியில் (2000-2002) அரச அதிபராக இருந்த சண்முகநாதன், பொறியியலாளர் கிரிதரனும் இணைந்து இவ்வூழல் மோசடியில் சம்பந்தப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக, இவ் ஊழல் மோசடிகள் விடயத்தில் 14 புனர்வாழ்வு வேலைத் திட்டங்கள் தொடர்பான உள்ளக கணக்காய்வுகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இப் 14 வேலைத் திட்டங்களிலும் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்காலப் பகுதிகளில் செயற்றிட்டங்களைத் தயாரிப்பவரும், BOQQ தயாரிப்பாளரா

(iv ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி மீனவர்களின் வலைகள் இந்திய இழுவைப்படகுகளால் நாசம்

## மீனவர்கள் யாழ். அரச அதிபரிடம் முறையீடு

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு சுப்பர் மடம் மற்றும் இன்பருட்டி சக் கோட்டை கடற்பகுதிகளில் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த வடமராட்சி மீனவர்களின் மீன் பிடி வலைகள் இந்திய ட்ரோலர்களினால் இழுத்து அறுத்துச் செல்லப்பட்டதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மீண்டும் வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்த நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப் படகுகள் அப் பகுதியில் மீனவர்களின் மீன் பிடி வலைகளை அறுத்து நாசப் படுத்தியுள்ளது. இதனை அடுத்து அச்சம் காரணமாக வடமராட்சி வடக்கு மீனவர்கள் கரைதிரும்பியுள்ளதாகவும் இதுதொடர்பாக வடமராட்சி வடக்கு மீனவர் சங்கங்களின் சமாசத்தில் மீனவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

அண்மைக்காலமாக வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் நடமாட்டம் குறைவடைந்த நிலையில் மீண்டும் கடந்த செவ்வாய்க்கிழமை பெரும் எடுப்பிலான இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் அத்துமீறிப் பிரவேசித்துள்ளதாகவும் இவர்கள் மீனவர்களின் உபகரணங்களை நாசம் செய்து வருவதாக மீனவர் சங்கங்களின் சமாசம் யாழ். அரச அதிபரிடம் முறைப்பாடு ஒன்றினை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (27)

# தமிழ் அரசியல் கட்சி அலுவலகங்களுக்கு யாழ்.இல் இராணுவப் பாதுகாப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் அலுவலகங்களுக்கான பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது பொலிஸ் பாதுகாப்புடன் மேலதிகமாக இராணுவப் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி மற்றும புளொட ஆகிய கட்சிகளின் அலுவலகங்களின் பாதுகாப்பே தற்போது அதிகரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என ஐந்து பேர் அண்மையில் கொலை செய்யப்பட்ட போதிலும் கடந்த 14 ஆம் திகதி ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியின் மாவட்ட அமைப்பாளர் தம்பிராசா சுபத்திரன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே இக் கட்சிகளின் அலுவலகங்களின் பாதுகாப்புக் குறித்து தற்போது படைத் தரப்பு தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

தற்போது வழங்கப்பட்டுள்ள இராணுவப் பாதுகாப்பின் நிமித்தம் அலுவலகங்களுக்கு முன்பாகவும் அலுவலகத்துக்கு அண்மித்த இடங்களில் புதிதாக இராணுவக் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# போரினால் கடும் பாதிப்புற்ற 25 குடும்பங்களுக்குக் கடனுதவி

விசுவமடுப் பிரதேசத்தில் உள்ள மாவீரர், போராளிகளின் பெற்றோர்கள் மற்றும் போரினால் கடும் பாதிப்புக்குள்ளாகிய 25 குடும்பங்களுக்கான சுழற்சி முறையில் கடன் வழங்கும் நிகழ்வு விசுவமடு மாவீரர் மண்டபத்தில் கடந்த செவ்வாய் மாலை 3.30 மணிக்கு சமுதாய முன்னேற்ற நிலைய வன்னி வலய இணைப்பாளர் வ.கமலநாதன் தலைமையில் ஆரம்பமானது.

நிகழ்வில் கருத்துரைகளை விசுவமடுப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.செழியன் மற்றும் சு.பொ.மே.நிறுவன கண்டாவளைப் பிரதேச இணைப்பாளர் காசிநாதன், கெயார் நிறுவன திட்ட இணைப்பாளர் செல்வி வதனா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள்.

சுழற்சிமுறைக் கடனாக 465000 ரூபா வழங்கப்பட்டுள்ளதெனவும், இப்பணம் அறவீடு செய்யப்பட்டு ஏனையவர்களுக்கும் சுழற்சி முறையில் வழங்கப்படும் என சமுதாய முன்னேற்ற வன்னிவலய இணைப்பாளர் கமலநாதன் தெரிவித்துள்ளார். (14)

## மிதிவெடி அகற்றல்

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி புதுக்காடு வீதியில் கல்லடி வைரவர் கோவிலைச் சுற்றியுள்ள பகுதியில் படையினர் நிலை கொண்ட இடத்தில் உள்ள மிதிவெடிகள் மற்றும் பொறிவெடிகளை மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு மிக வேகமாக அகற்றிக் கொண்டு இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. இந்தக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு முன்னர் கட்டைக்காடு.தாளையடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் நிலைகொண்ட பிரதேசங்களில் மிதிவெடிகளை அகற்றி வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (11)

## ஆனி உத்தரப் பொங்கல் விழா

இராமநாதபுரம் மாவடி சிறி மாரியம்பாள் ஆலய வருடாந்த ஆனி உத்தரப் பொங்கல் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து அம்பாள் திருவீதி உலா நடைபெறும்.

நாளை பாற்காவடி, பாற்செம்பு ஆகிய நேர்த்திக்கடன்களை அடியார்கள் நிறைவு செய்யவுள்ளனர். அத்துடன் நாளை மதியம் அன்னதான நிகழ்வும் இடம் பெறும்.


முத்துஐயன்கட்டு வலதுகரை
தான்தோன்றி நாகதம்பிரான் ஆலய

**பொங்கல் விழா**

நிகழும் ஆனித்திங்கள் 21ஆம் நாள் சனிக்கிழமை (05 – 07 – 2003) இரவு பொங்கலும் விசேட அபிஷேக ஆராதனைகளும் 06 – 07 – 2003 ஞாயிற்றுக்கிழமை பகல் அன்னதானமும் அதனைத் தொடர்ந்து ஏல விற்பனை நடைபெறவுள்ளதால் அடியார்கள் அனைவரையும் கலந்து எம்பெருமான் அருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆலயப் பரிபாலன சபை.**

(3248)


**நெஞ்சில் நீங்காத நினைவுகளாய்**



பிறப்பு 14 • 05 • 1972

வீரச்சாவு 04 • 07 • 2000

**லெப். கேணல் நிஸ்மியா**

(முன்னாள் அ.து.ம. பொறுப்பாளரும், மாலதி படையணித் தளபதியும்)

**சிற்றம்பலம் ரஞ்சிதமலர்**

கொக்குதொடுவாய், மணலாறு.

நேற்றுவரை எம்முடனிருந்தீர்
இன்றெம்முள்ளே கலந்தீர்
எதிரிகளுக்கு நெருப்பானீர்
எங்களுக்கு நிழலானீர்
நீங்கள் நின்மதியாய்
உறங்குங்கள் –உம்
வழித்திசையில்
விரிந்தபடி எம் விழிகள்.

இந்நாளில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

அழியா நினைவுடன்,

**குடும்பத்தினர், போராளிகள்.**

(3198)

# வட்டக்கச்சியில் வீரமுரசு வார அரங்கு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையில் வீரமுரசுவார அரங்கு நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை மாலை 7.30மணிக்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் புதுவை அன்பனின் கரைதேடும் ஓடங்கள் எனும் நாடகம் உட்பட பாடசாலை மாணவர்களின் பல கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. (12)

# வட்டக்கச்சி கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று பகல் 11.55 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 10ம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 11ம் திகதி இரவு 8.30 மணிக்கு சப்பறமும், 12ம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், 13ம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், 14ம் திகதி இரவு 8.30 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும். (12)

# பூநகரிப் பிரதேசத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

பூநகரிப் பிரதேசத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவ மனையினரின் ஏற்பாட்டில் சுகாதார விழிப்புணர்வுக்கருத்தரங்கு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டுள்ளது.

பூநகரி மகாவித்தியாலயத்தில் உப அதிபர் கி.புஸ்பராசா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கௌரி பொதுச் சுடரேற்றினார். பூநகரிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் த.நிரு பன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக 4ஆம் ஆண்டு மருத்துவ மாணவர்களின் குழுவால் தொற்றுநோய், பற்சுகாதாரம், தனிநபர் சுகாதாரம், சார்ஸ் நோய், எயிட்ஸ் நோய் என்பன பற்றி விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

நூற்றுக்கும்மேற்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் இக் கருத்தரங்கினால் பயனடைந்தனர். ஏற்பாடுகளை தியாகி திலீபன் மருத்துவமனை வைத்தியர் நளா மேற்கொண்டிருந்தார் (34)

# கிராமங்கள் தோறும் புதிய அலுவலகங்கள் அமையும்

## -உள்நாட்டலுவல்கள் அமைச்சு திட்டம்

கிராம சேவகர், சமுர்த்தித் திட்ட உத்தியோகத்தர், விவசாய உதவிப் போதனாசிரியர் ஆகியோர் கிராமத்தில் ஒரே அலுவலகத்தில்கடமை புரியும் வகையில் அலுவலகங்கள் அமைக்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுளளது. பொது நிர்வாக அமைச்சின் அர்ல் குணசேகரா இந்தப் புதிய திட்டத்தை அறிமுகப் படுத்தி உள்ளார். இதில் தற்பொழுது கிராம சேவையாளர்கள் தமது சொந்த இடங்களில் காரியா லயங்கள் நடத்தி வருகின்ற படியால் பொதுமக்கள் பல தடவைகள் இவர்களின் இல்லங்களிற்குச் செல்ல வேண்டி உள்ளது. பல தடவைகள் வீடுகளுக் குச் சென்றும் கிராம சேவகர் இல்லாமல் வீடு திரும்பி வருகின்றனர். இதனால் பொது மக்கள் தமக்குரிய காரியங்களை உரிய நேரத்தில் செய்ய முடியாமல் திண்டாடுகிறார்கள். இந்த அசௌகரியங்களைப் போக்கு வதே அமைச்சின் திட்டமாகும். இத்திட்டம் நாடு முழுவதும் அமுல் செய்யப்படும். பொது இடத்தில் இக்காரியாலயம் அமைக்கப்பட உள்ளது. வாரத்தில் ஒரு நாள் இக்காரியாலயத்தில் கட்டாயமாக இம் மூவரும் கடமை புரிய வேண்டும் என உள்நாட்டு அமைச்சர் அறிவித்துள்ளார்.

**3 ஆம் ஆண்டின் நினைவில்....**



பிறப்பு
01.08.1981
05.06.1981

வீரச்சாவு
04.07.2000
16.12.2000



**வீரவேங்கை**
**பிறை/செல்வி**

**கப்டன்**
**மதுவிழி/ஜெயக்குமாரி**

*விடுதலை வானில் வெற்றிச் சிறகடித்துச் சிரித்தீர்களே.*
*தேச விடுதலைக்காய் இறுதிவரை களமாடிய வேங்கைகளே.*
*கரிகாலன் அணி சேர்ந்து களமாடி துயில் வாழ்வெய்திய வீரக் குழந்தைகளே.*
*தென்றல் வீசும் வாசமலர்ச் சோலையில் மறுபடியும் எழுந்து வருவீர்கள்.*
*தளராத உம் பாதச் சுவடுகளில் மலர்தூவி அஞ்சலிக்கின்றோம்.*
*அன்னையும் உறவுகளும் உங்கள் வரவிற்காய்க் காத்திருக்கின்றனர்.*
*வந்துவிடுங்கள் மீள...*

**இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.**

**குடும்பத்தினர் (மதுரி),**
1ம் வட்டாரம் முருகன் கோவிலடி,
புதுக்குடியிருப்பு.

(3247)

# நாகர் கோவில் வீதியைத்திறந்து ஏ – 9 வீதி புனரமைப்பிற்கு உதவிடுக!

## பாதுகாப்பு அமைச்சிற்கு ஒப்பந்தக்காரர் கடிதம்

(கொழும்பு)

**ஏ-9 பாதையைத் துரிதமாகவும், சிரமமின்றியும் புனரமைப்பதற்கு வசதியாக நாகர்கோவில் வீதியைத் தற்காலிகமாகத் திறந்துவிடுமாறு கோரி ஏ-9 வீதித்திருத்த ஒப்பந்தக்காரர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.**

இவ்வீதியை சில காலங்களுக்கு முன்னர் திறந்துவிடுமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரியிருந்தது. இதற்கு விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்தனர். ஆனால் இராணுவத்தரப்பு இதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தது.

இதனால் இவ்வீதியின் திறப்பு விவகாரம் கைவிடப்பட்டிருந்தது. இவ்வீதியைத் திறந்து மக்கள் பாவனைக்கு விட்டால் ஏ-9 வீதியின் பாவனை குறைவடையும், இதனால் ஏ-9 வீதியைத் துரிதமாகப் புனரமைக்க முடியும் என்றும் இக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(33)

# ஐ.நா அமைதிகாக்கும் பணிக்கு சிறி.படையினருக்குப் பயிற்சி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள்சபை ஒழுங்கு செய்துள்ள அமைதி காக்கும் பணி தொடர்பான பயிற்சி சிறிலங்காப் படையினருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் ஆரம்பமான இப்பயிற்சியில் 18 ஆசிய நாடுகள் கலந்துகொண்டுள்ளதாக சிறிலங்காவின் படைத்துறை அமைச்சுக் கூறியுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பட்சத்தில் ஆயிரக்கணக்கான படையினர் வேலை இழக்கும் நிலை ஏற்படும் என்பதனால் ஐக்கிய நாடுகள் அமைதிப் பணியில் சிறிலங்காப் படையினரையும் ஈடுபடுத்தும் நோக்குடனேயே இம்முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசு தெரிவித்துள்ளது.

# தமிழ் தெரியாத நிர்வாகிகளால் மலையக மக்கள் அவதி

## இல.தொ.சம்மேளனம் கவலை

(கொழும்பு)

மலையகத்தில் தமிழ் தெரியாத நிர்வாகிகள் கடமை புரிவதால் தமிழ் மக்கள் மிக சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் என இலங்கை தொழிலாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது அதிகமாக மலைநாட்டு மக்களையே பாதித்துள்ளது. அவர்கள் காரியங்கள் செய்வதற்கு அரச திணைக்களங்களுக்குச் சென்றால் அங்கே அவர்களுக்குச் சிங்களப் படிவங்கள் நிரப்புவதற்கு கொடுக்கின்றார்கள். சிங்கள மொழிதெரியாமையால் மிகஅசௌகரியங்களுக்கு ஆளாக்கப்பட்டு அக்காரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இது சம்பந்தமாக எமது சம்மேளனம் பல தடவைகள் அரசுக்கு அறிவித்துள்ளது. இதுவரை அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதது கவலையளிக்கிறது என்றும் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

# மக்கள் வாழ்விடங்களில் இராணுவம் பயிற்சி

# யாழ் குடாநாட்டு மக்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வாழ்விடங்களை அண்மித்துப் பயிற்சிகளில் ஈடுபடும் இராணுவத்தினரின் நடவடிக்கை குறித்து ரெலோ இயக்கத்தினர் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக குருநகர், பாசையூர், திருநெல்வேலி ஆகிய பிரதேசங்கள் உட்பட ஏனைய மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் படையினர் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடுவதால் மக்கள் மிகுந்த அச்சங்கொண்டுள்ளனர். இவ்வாறாக மக்களைப் பீதியடைய வைக்கக் கூடிய படையினரின் செயல்கள் நிறுத்தப்பட வேண்டும் என ரெலோ இயக்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இவ்வியக்கத்தின் முதல்வர் சிறிகாந்தா இராணுவப் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்கள் வாழ்விடங்களை அபகரித்து வைத்திருப்பது போதாது என்று இராணுவத்தினர் மக்கள் வாழ்விடங்களிலும் இவ்வாறான பயிற்சிகளில் ஈடுபடுவது மனச்சாட்சியில்லாத செயல் என்றும் தெரிவித்துள்ளார். (33)

# கப்டன் தனபால் முன்பள்ளி திறப்பு விழா

பூநகரி பள்ளிக்குடாவில் கப்டன் தனபால் முன்பள்ளித் திறப்புவிழா கடந்த சனிக்கிழமை நடை பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதி உதவியுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒழுங்கமைப்பில் பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மங்கல விளக்கினை யோ.பிரான்சிஸ்(பள்ளிக்குடா கடற்றொழில் சங்கத் தலைவர்).கப்டன் தனபால் முன்பள்ளித் தலைவர் திரு.க.இராசேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். பொதுச்சுடரினை முன்பள்ளி ஆசிரியர் வி.தவராணி ஏற்றிவைத்தார்.

தேசியக்கொடியை பிரதேச முன்பள்ளித் தலைவர் தா. கிருஸ்ணசாமி ஏற்றி வைத்தார். மாவீரர் படத்தை சகோதரன் தங்கராசேஸ்வரன் திரைநீக்கம் செய்து வைத்தார். தமிழர்புனர் வாழ்வுக் கழக கொடியை நிறுவன இணைப்பாளர் சி.கிருபாகரன் ஏற்றி வைத்தார்.

# வயோதிபரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(வடமராட்சி)

வடமராட்சி-புற்றளை பிள்ளையார் கோவில் பகுதியில் உள்ள ஆலயக் கிணற்றினுள் சடலமான நிலையில் வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளார்.

புற்றளைப் பகுதியைச் சேர்ந்த அருணாசலம் கந்தப்ப சேகரம் (வயது 63) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிசாருக்கு வழங்கிய தகவலை அடுத்துச் சடலம் மீட்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைப்பதற்குப் பருத்தித்துறை நீதவான் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். (27)



பாக்தாத்தில் அண்மைக் காலமாக அமெரிக்க இராணுவத்தினர் மீது நடத்தப்படும் தாக்குதல் காரணமாகதனியார் வைத்தியசாலை அருகில் உசார்நிலையில் இருக்கும் அமெரிக்க இராணுவம்.

## -மத்திய கிழக்கு சமாதானம்-

# புதிய சர்வதேச திட்டத்தின்படி பெத்தலேகேம் நகர் பலஸ்தீனரிடம் ஒப்படைப்பு

(ரெல்அவிவ்)

மத்திய கிழக்கு சமாதானம் தொடர்பான புதிய சர்வதேச திட்டத்தின் ஓர் அங்கமாக மேற்குக்கரை நகரமான பெத்தலேகேமின் கட்டுப்பாடு பலஸ்தீனரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலியப் படையினர் அந்த நகரின் கட்டுப்பாட்டை பலஸ்தீனப் படையினரிடம் வழங்கியதன் பின்னர் நீலநிற சீருடை அணிந்த பலஸ்தீனப் படையினர் பெத்தலேகேம் நகரின் பொலிஸ் தலைமைச் செயலகத்தின் மேல் பலஸ்தீனக் கொடியைப் பறக்கவிட்டனர். சிலர் பெத்தலேகேம் நகரின் மையப்பகுதிக்கு அணிவகுத்துச்செல்ல மற்றையோர் வாகனங்களில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

யேசுநாதர் பிறந்த தேவாலயத்தில் இருக்கும் மணி குதூகலத்தில் ஒலிக்கப்பட்டது .இருப்பினும் பெத்தலேகேம் நகரத்தைச் சுற்றிலும் முக்கியமான நிலைகளில் தொடர்ந்து இஸ்ரேலியப் படையினர் நிலை கொண்டிருப்பார்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது.



மத்திய கிழக்கில் அமெரிக்க ஆதரவுடன் தோன்றியுள்ள சமாதானத்தைத்தொடர்ந்து காசா முனையில் இஸ்ரேல் இராணுவ வீரர் பலஸ்தீன இராணுவ வீரருடன் உரையாடுகிறார்.

# தாக்குதல்கள் நடைபெறினும் ஈராக்கிலிருந்து படைகள் விலகாது

## அமெ,பிரிட்டிஷ் அரசுகள் அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கிலுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் வீரர்கள் மீது தாக்குதல்கள் நடைபெற்ற போதிலும் அங்கிருந்து படைகளை வாபஸ் பெறும் நோக்கம் இல்லையென இருநாடுகளும் தெரிவித்துள்ளன.

தாக்குதல்கள் அதிகரித்து வருவதையிட்டு புஷ் கருத்து வெளியிடுகையில், ஈராக்கில் சனநாயகத்தை ஏற்படுத்தவென அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்படும் எனக் கூறியுள்ளார்.

அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் நடந்திய தாக்குதலில் 06 இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர். ஒரு ஈராக்கிய மொழி பெயர்ப்பாளர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் பலூஜாவிலுள்ள பள்ளிவாசலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 06 ஈராக்கியர்கள் உயிரிழந்துள்ளனர். இந்நகரம் சதாமின் ஆதரவாளர்கள் அதிகளவாக வாழும் நகரமாகும்.

"மே" மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் 65 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என பென்டகன் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேய்த்திருவிழா

தாய்லாந்து கிராமமொன்றில் நடைபெற்ற பேய்த்திருவிழா ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை கவர்ந்துள்ளது. தாய்லாந்து நாட்டில் தான்ஸா எனும் கிராமத்தில் பல ஆண்டுகளாகப் பேய்த்திருவிழா நடந்து வருகின்றது. மூன்று நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் காண்போரைப் பயமுறுத்தும் வகையில் கொடூர வேடமணிந்து ஆடிப்பாடினர்.இவ்விழா சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்துள்ளது.

## -இந்தியாவில் முக்கிய பிரமுகர்களின்-

# பாதுகாப்பான பிரயாணத்திற்கு தனியான விமானம் வாங்க முடிவு

(புதுடில்லி)

இந்திய சனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் வாஜ்பாய் போன்ற முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்புடன் பயணம் செய்வதற்கென்று புதிய விமானங்கள் வாங்குவது குறித்து ஆய்வு செய்வதற்காக பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தலைமையில் 06 பேர்கொண்ட உயர்மட்டக்குழு பிரேசில் செல்லவுள்ளது.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் சனாதிபதி,பிரதமர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.இதன்படி முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்பான முறையில் பயணம் செய்வதற்குப் புதிய விமானங்களை வாங்க மத்திய அரசு முடிவுசெய்துள்ளது.

# வல்வெட்டித்துறை கடற்பரப்பில் மீனவர் மீது கடற்படை தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சியின் வல்வெட்டித் துறை ஆதிகோவிலடி கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் இருவர் மீது சிறிலங்காக் கடற்படையினர் மோசமான தாக்குதலை நடத்தியுள்ளனர். ஆதிகோவிலைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான பொன்னையா யோகதாஸ் (வயது-36), செல்லையா துரைச்செல்வம் (வயது-31) ஆகிய இருவருமே தாக்கப்பட்டவர்களாவர். இவர்கள் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் மீன்பிடித் தொழிலுக்காக கரையில் இருந்து ஐந்து கடல்மைலுக்கு அப்பால் பயணித்துக் கொண்டிருந்த வேளை வழிமறித்த கடற்படையினர் சோதனையிடப் போவதாகத் தெரிவித்துள்ளனர். ஆயினும் கரையோரத்தில் நிலைகொண்டுள்ள படையினர் சோதனையிட்ட பின்னரே தொழிலுக்கு அனுமதித்ததாக கூறியவேளை திடீரென படையினர் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி மீனவர்கள் பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டதுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலும் முறைப்பாடு செய்தனர்.

இதனை அடுத்து நேற்று ஸ்தலத்திற்கு விரைந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்ததுடன் இது போன்ற சம்பவம் இனிமேல் இடம்பெறாது பார்த்துக் கொள்வதாகவும் உறுதியளித்தனர். (27)

# புலிகள்–தமிழ்க் கூட்டமைப்பினர் கொக்கட்டிச்சோலையில் சந்திப்பு!

விடுதலைப்புலிகளுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் இரவு கொக்கட்டிச்சோலையில் சந்திப்பொன்று நிகழ்ந்துள்ளது.

தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக இடம்பெற்ற இச்சந்திப்பில் மட்டு. அம்பாறை பிரதி இராணுவத் தளபதி ராம், மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், பிரதி அரசியல் துறைப் பொறுப்பாளர் கிருசன் ஆகியோரும், தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ஜி. கிருஸ்ணபிள்ளை, தங்க வடிவேல், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்லடி இராணுவ முகாமை சிறிலங்கா இராணுவத்தினர் பலப்படுத்துவதுடன் விஸ்தரிப்பது குறித்து முக்கியமாக ஆராயப்பட்டது.

# காக்கை வலிப்பு நோயாளர்களுக்கு நடமாடும் வைத்திய சேவை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் 20 வயதிற்குட்பட்ட காக்கை வலிப்பு நோயாளர்களுக்கு நோர்வே நாட்டில் இருந்து வருகை தரும் நரம்பியல் நிபுணர் வைத்திய கலாநிதி சூசை யோசப் அவர்களால் கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கத்தின் ஏற்பாட்டில் பின்வரும் இடங்களில் 10.07.2003 தொடக்கம் 13.07.2003 வரை இலவச மருத்துவ சேவை நடாத்தவுள்ளது. எனவே ஏற்கனவே சங்கத்தில் பதிவு செய்த 20 வயதிற்குட்பட்ட நோயாளர்களும் மற்றும் சங்க அங்கத்தினரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கிளி.ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம் கேட்டுள்ளது. 10ம் திகதி ஜெயபுரம் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கத் தொடர்பகம், 11ம் திகதி ஆனைவிழுந்தான் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்க தலைமைச் செயலகம், 12ம் திகதி கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம், (டிப்போ சந்திக்கு அருகாமை), 13ம் திகதி கல்மடுநகர் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கத் தொடர்பகம். (நந்தவனப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமை). (லோ)

## விடுதலைப் ...

எடுத்து விளக்கியபோது அதற்கு கனேடியத் தூதுவர் பாராட்டுத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை தரைப் பாதையூடாக கிளிநொச்சியை வந்தடைந்த இக்குழுவினர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அடங்கிய குழுவினரை 11.30 மணிக்கு விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் சந்தித்து உரையாடியுள்ளனர்.

மேற்படி சந்திப்பில் சிறிலங்காவிற்கான கனேடியத் தூதுவர் லவேரி ரேமன்ட், தூதரக குடிவரவு குடியகல்வு அதிகாரி ஜேம்ஸ் சுல்ட்ஸ் கன்சலர் மற்றும் தூதரக அபிவிருத்தி ஆலோசகர் ஜோன் வில்லியம் சினிவோ டேவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகள் சார்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடன் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் கலந்து கொண்டார்.

மேற்படி சந்திப்பு பிற்பகல் 1.40 மணிக்கு நிறைவு பெற்றது. (லோ)

## யாழ்.மாவட்ட....

கவும், இவ்வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் செய்பவராகவும் ஒருவரே இருந்துள்ளார். இவரே நெறியாளர் கிரிதரன் ஆகும். அத்தோடு, இவ்வேலைகளுக்கான காசோலைக் கொடுப்பனவுகளையும் அவரே பெற்றுக் கொண்டுமுள்ளார்.

இம்மோசடி நடவடிக்கையில் கட்டப்படாத கட்டடங்களுக்கும் நிதி பெறப்பட்டுள்ளது. அத்தோடு பூர்த்தியடையாத வேலைகளுக்குக்கூட முழு அளவில் நிதி கொடுக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல கட்டட நிர்மாணத் தொகைக்கான நிதியை விட அதிக நிதி. கொடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்விடயத்தில் அன்றைய அரச அதிபர் வழிகாட்டும் நிதியியல் விதிகளையோ நிதியியல் சுற்றறிக்கைகளையோ கருத்திற்கொள்ளவில்லை எனவும் தற்போதைய அரச அதிபர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இக்கடிதத்தில், 14 வேலைத் திட்டங்களும் யார் யாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவற்றின் திட்ட மதிப்பீடு என்ன? இதில் முற்பணமாக வழங்கப்பட்ட தொகை, முடிக்கப்பட்ட வேலைகளின் அளவு போன்ற பல்வேறு விடயங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத் திட்டங்களில் சிலவற்றிற்கு வழங்கப்பட்ட நிதியின் அளவானது அதன் மொத்தமான திட்ட மதிப்பைவிட அதிகமானதாகும். இதேவேளை, வேலைகள் ஆரம்பிக்கப்படாமல்கூட வேலைகள் நிறைவுபெறப்பட்டதாக நிதி பெறப்பட்டுள்ளது.

## கரும்புலிகள்...

தாங்கிய பேரணி ஒன்றும் பின்னர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நாளை காலை 9.00 மணிக்கு கரும்புலி மாவீரர்களின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தியுடன் எழுச்சி ஊர்வலம் புதுக்குடியிருப்பு காவல் பணிமனைக்கு முன்பாக இருந்து ஆரம்பமாகி புதுக்குடியிருப்பு பிரதான சந்தியில் அமைந்திருக்கும் கரும்புலிகள் நினைவாலயம் முன்றலில் முடிவடைந்து பொதுக் கூட்ட நிகழ்வு இடம்பெறும்.

மாலை நிகழ்வு இரவு 7.30 மணிக்கு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளன.

பூநகரிப் பிரதேசத்தில் கரும்புலிகள் நாள் நிகழ்வு நாளை எவரெடி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

விசுவமடுப் பிரதேசத்தில் நாளை கரும்புலி மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு காலை 10.00 மணிக்கு விசுவமடு மாவீரர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாலை 5.00 மணியளவில் கரும்புலி மாவீரர்களின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனி விசுவமடு காவல்துறைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி விசுவமடு நகர்ப் பகுதியில் விசேடமாக அமைக்கப்பட்ட மைதானத்தில் உள்ள விசேட பந்தலில் வைக்கப்பட்டு தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. (27.14.34)

## 512 பிரிகேட்...

கடந்தமாதம் வந்த இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் இந்த முகாமினுள் உயர் இராணுவத் தளபதிகளை அழைத்துக் கலந்துரையாடியுள்ளனர். இதில் யாழ்மாவட்ட பாதுகாப்புவலயங்களைப் பலப்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

## மட்டு...

காயங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்களே குண்டுத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இதன் எதிரொலியாக இரு தமிழ் இளைஞர்களைக் கைது செய்த பொலிசார் அவர்களை விசாரணைக்கும் உட்படுத்தியுள்ளனர்.

# குருநகர் கடற்கரை வீதி மக்கள் பாவனைக்குத் தடை

## தொழில் செய்ய முடியாது மீனவர்கள் அவதி

குருநகர் கடற்கரை வீதியை மக்கள் பாவனைக்கு இராணுவத்தினர் தடை விதித்திருப்பதால் அப்பகுதியைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தமது சொந்த இடங்களில் குடியேற முடியாதுள்ளது.

இதனால் இப்பகுதிகளில் வாழ்ந்த 1000க்கும் மேற்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேற முடியாது இன்னமும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதிக் கடற்கரையில் நீண்ட நேரம் நிற்பதற்கும் மீன்பிடி உபகரணங்களை வைப்பதற்கும் படைத்தரப்புத் தடை விதித்துள்ளது.

இதனால், தொழிலுக்குக் கொண்டு சென்ற மீன்பிடி உபகரணங்களை அப்பகுதியில் உலரவிடமுடியாதுள்ளது. இதனால், மீனவர்கள் தங்களது வலைகளை ஈரத்துடன் காவி வந்து தமது குடியிருப்புக்கு அண்டிய வீதியில் உலரவிடுகின்றனர். இதனால், இப்பகுதி துர்நாற்றமுடையதாக மாறியுள்ளது. வீதிப் போக்கு வரத்துக்கும் இது இடையூறாகவுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணக் கழிவு நீரை கடலுக்குக் கடத்தும் வாய்க்காலை படையினர் மண்மூட்டைகளாலும் கம்பி வேலிகளாலும் தடுத்துள்ளனர். இதனால் இப்பகுதி துர்நாற்றமுடையதாகவுள்ளது. (33)

# விசுவமடுப் பகுதியில் விபத்தில் இருவர் காயம்

(விசுவமடு)

விசுவமடு 10ஆம் கட்டைப் பகுதியில் துவிச்சக்கர வண்டி மோட்டார் சைக்கிள் விபத்தில் துவிச்சக்கர வண்டியில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்து ஆபத்தான நிலையில் யாழ். வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

கண்டாவளை வெலிக்கண்டல் பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராசையா(வயது 51) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டியவரும் காயமடைந்தார். (14)

### - பலாலி விமானப்படைத் தளத்தினுள் -

# நவீன கருவிகள் பொருத்தப்பட்ட நுழைவாயில் அமைக்க ஏற்பாடு

பலாலி விமானத்தளத்தினுள் பிரமாண்டமான நுழைவாயில் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மிகவும் பிரமாண்டமான முறையில் அமைக்கப்படவுள்ள இந்த நுழைவாயிலில் அதி நவீன கருவிகள் பொருத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

விமான நிலையத்தினுள் எடுத்துச்செல்லப்பட முடியாத பொருட்களையும், ஏனைய தடயங்களையும் இனங்காட்டிக் கொடுக்கக்கூடிய வகையில் நவீன கருவிகள் பொருத்தப்பட இருக்கிறது.

பயணிகளின் பாதுகாப்புக்காகவே இந்த நுழைவாயில் அமைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆனால் படையினரின் பாதுகாப்பிற்கும் விமானத்தளத்தின் பாதுகாப்பிற்காகவுமே இது அமைக்கப்படுகிறது. இந்த விமான நிலையத்தைச் சூழ முட்கம்பி வேலிகள் சகிதம் புதிய காவலரண்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.பயணிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொள்வதை விட படையினர் தமது பாதுகாப்பிலேயே அக்கறை கொள்வதாக அப்பகுதியிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (33)

### - அரச வைத்தியசாலைகளில் -

# சிற்றூழியர்களின் வேலைகளை இராணுவம் மேற்கொள்கிறது

அரச வைத்தியசாலைகளின் சிற்றூழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொண்டு வருவதை அடுத்து அவர்களது பணிகளை படையினரைக் கொண்டு மேற்கொள்வதற்கு சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளது. இதன்பிரகாரம் நேற்று முதல் அரச வைத்தியசாலைகளில் சமையல் வேலைகளிலும் துப்புரவுப் பணிகளிலும் படையினர் ஈடுபடுத்தப்படுகின்றனர்.


# கூறுவிலை கோரல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கென ஏ – 9 வீதி முறிகண்டியில் வீதியின் மேற்குப்புறமாக வீதியிலிருந்து ஏறத்தாள சராசரி 1.5 கி.மீ தூரத்தில் ஒதுக்கப்பட்ட காணியில் ஐந்து பெயர்ப்பலகைகள் செய்து பொருத்த கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

கூறுவிலைப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளர் (குடிசார்) அவர்களிடமிருந்து 09.07.2003 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீட்டுக்கான தொகையை பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

☐ மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூபா 1000/-

பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப்படிவங்கள் 10.07.2003 காலை 10.00 மணிக்கு முன் தலைவர், கூறுவிலைக்குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பராமரிப்புப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கூறுவிலைப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதியில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கூறுதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

தபால் பெட்டி இலக்கம் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-8401)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு யூலை மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.